# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Summary Trial Case No: | STC.209/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **ம.சா.1** |
| Name : | **சங்கரி** |
| Father's/Husband Name: | **சரவணன்** |
| Village : | **அ.மேட்டூர்** |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.08.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி பிரபு ஆஜர் இல்லை.மனு செய்து கொள்ளப்பட்டது.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) நீங்கள் எந்த தேதியில் எதிரிக்கு காசோலை தொகை கொடுத்தேன் என்றால் தேதி, மாதம் நினைவில்லை, 2016ம் வருடம் கொடுத்தேன். உங்களுடைய தாயார் எதிரிக்கு எதிராக காசோலை வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். அதிலும் என்னுயை வழக்கறிஞர் தான் அவருடைய வழக்கறிஞர். அவருடைய வழக்கறிஞர் அலுவலகம் திருச்சி டோல்கேட் அருகே அமைந்துள்ளது. நீங்கள் உங்களுடைய அபிடவிட்டில் கூறியுள்ள அம்சங்கள் அனைத்தும் எதிரி மறுக்கிறார் அது இந்த வழக்கிற்கு உதவாது என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கலுக்கு முன்பாகவே மாவட்ட போலிஸ் சூப்பிரண்டன்ட் எதிரிக்கு எதிராக புகார் அளித்தேன். அதற்காக நீங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொய்யான காரணங்களை அனுசரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கிற்கான சம்மந்தமில்லாத சங்கதிகளை கூறியது மட்டும் அல்லாமல் எதிரிக்கு அவபெயர் ஏற்படும் வகையில் பொய்யான சங்கதிகளை

கூறுகிறேன் என்றால் சரியல்ல. நகை அடமானம் வைத்தற்கான ஆவணங்களை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.